CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

# THE KOVAI HERALD

தி கோவை ஹெரால்டு

CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald
Volume 8 | Issue 28 | English & Tamil Weekly | 07.12.2025 SUNDAY | 8 Pages | Price Rs.3/-






THE KOVAI HERALD

"Meditation" or "Dhyana" means to go beyond the limitations of the physical body and the mind. Only when you transcend the limited perspective of the body and the mind do you have a complete dimension of life within you.

When you are identified as the body, your whole life is only about survival. Your whole perspective of life will be simply survival. When you are identified as the mind, your whole perspective is enslaved to the social perspective, to the religious perspective, to the family perspective. You can't look beyond that. Only when you become free from the modifications of your own mind will you know the dimension of the beyond. Can you see that this body and this mind are not yours? It is something that you have accumulated over a period of time. Your body is just a heap of food you have eaten; your mind is just a heap of impressions you have gathered from the outside.

What you have accumulated you handled well, it is your property. Like your home and your bank balance, you have a body and a mind. You have a good bank balance, a good body and a good mind. Good! This is needed to live a good life. But it is not sufficient.

It is not fulfilling yet. No human being will ever be fulfilled by these things. They will only make his life comfortable and conducive. Especially if you see Western society, everything that you are dreaming of, every average citizen has. But do you think they are fulfilled, that they are blissful? Definitely not! Nowhere near bliss. So Dhyana is to transcend the limitations of body and mind, and you begin to experience yourself in a much deeper dimension.

Your instruments, body and mind are okay to live in this world for survival. But life will not be fulfilled with them.

And if you don't know who you are, are you capable of knowing what the world is? If you want to know the true quality of who you are, only if you transcend the limitations of your body and mind can there be a possibility for you to experience it. Yoga and Dhyana are scientific tools, which help you to transcend the limitations of your body and mind and experience the true quality of who you are.

Without experiencing this, just eating, sleeping, reproducing and dying, your life will not be fulfilled with these. All those things are needed in your life. But our life is not complete because of these, even if you have fulfilled all these fully. This is because the quality of a human being has crossed a certain boundary of awareness. It has to seek something more, otherwise it will never be satisfied. It has to become unlimited. So Dhyana or meditation is a way of moving into the unlimited dimension of who you are.

## Sri Ramakrishna Institute of Technology Signs MoU with ZealOne Consulting Services



THE KOVAI HERALD

Sri Ramakrishna Institute of Technology has entered into a Memorandum of Understanding (MoU) with ZealOne Consulting Services, Bengaluru.

The MoU signing ceremony took place at the SNR Sons Charitable Trust, Avarampalayam, Coimbatore.

The MoU was exchanged by Deepa Lingaraj, Founder of ZealOne, and C. V. Ramkumar, Chief Executive Officer, SNR Sons Charitable Trust, Coimbatore, on behalf of the college. Dr. J. David Rathnaraj, Principal, Dr.B.Chokkalingam, Head of the Department, Dr.R.Tamilselvan, Professor, Department of Mechanical Engineering and B. Varun, Placement Officer, were also present during the event.

## Rao Hospital successfully hosts ENDO INSIGHT 2025 YUVA IAGE




THE KOVAI HERALD

Indian Association of Gynaec Endoscopists (IAGE) Tamil Nadu Chapter, The Coimbatore Obstetric & Gynaecological Society, and the Coimbatore Chapter of TAPISAR in association with the Rao Hospital successfully hosted ENDO INSIGHT 2025 YUVA IAGE, a two-day national conference held at The Residency Towers, Coimbatore. With over 300 registrations from young gynaecologists, trainees, and practising clinicians from Coimbatore, Tamil Nadu, and several states across India, the event stood out as one of the most engaging academic programmes of the year.

Several compelling scientific sessions were held including an impactful oration by Dr. Kalyan Barmade, President of IAGE, titled "Laparoscopic Surgery in the Era of Robots." Dr. Damodar Rao, Secretary of IAGE Tamil Nadu Chapter, Associate Director Rao hospital and Event Org Chairperson, Dr. Asha Rao, Director of Rao Hospital, and Organizing Co-Chairperson of the event were present during the occasion.

## Coimbatore District Students Eligible to Apply for Prime Minister's Educational Scholarship

THE KOVAI HERALD

Backward Class, Most Backward Class, and Denotified Community students studying in government and government-aided educational institutions in Coimbatore district can now apply for the Prime Minister's Educational Assistance Scheme. This information was shared in a press release issued by District Collector Pavan Kumar K. Giriyappanavar.

The scheme provides annual financial assistance to eligible students studying in government and government-aided colleges, as well as those enrolled under government quota in private polytechnic and technical institutions across the district.



According to the release, final-year undergraduate students in arts and science colleges—such as BA, BSc, BCom—belonging to BC, MBC, and DNC categories will receive the scholarship without any income restrictions. This support is provided to ensure that students from disadvantaged backgrounds can complete their education smoothly. For students pursuing professional undergraduate degrees, postgraduate programmes, polytechnic courses, and other technical studies, the annual family income should not exceed ₹2.50 lakh to qualify for the scholarship.

Applications for the 2025 26 academic year must be submitted online. Students are required to approach the scholarship nodal officer at their respective institutions to upload their applications. The last date for submitting applications is December 31. For any clarifications regarding the scheme or the application process, students can contact the District Backward Classes and Minorities Welfare Officer located at the Coimbatore Collectorate campus.

## Last date for applications for 2025 Periyar Award for Social Justice is December 18, 2025

Coimbatore District Collector Pavan Kumar has announced that applications for the 2025 Periyar Award for Social Justice must reach the District Collector's office on or before December 18, 2025.

In a press release, the Collector stated that the "Periyar Award for Social Justice" has been presented since 1995 to honour individuals who have worked tirelessly for social justice. Recipients of the award receive Rs.1,00,000, a one-sovereign gold medal, and a citation. The awardee is selected by the Hon'ble Chief Minister of Tamil Nadu.

The government has invited recommendations and applications from eligible individuals who have made significant contributions towards promoting social justice and improving the quality of life of disadvantaged communities. Those who have demonstrated notable achievements in this field may submit their applications to the District Collector.

Applicants must include their bio-data, full postal address, phone number, and detailed documentation of their work and accomplishments in the field of social justice. The Collector also noted that inquiries may be directed to the District Backward Classes and Minorities Welfare Office at 0422-2300404.

Applications for the 2025 Periyar Award for Social Justice must reach the Collector's office by December 18, 2025.

## Kovai.co's Document 360 Surpasses $10 Million

Kovai.co, a bootstrapped, AI-first software company offering multiple products at scale in the B2B SaaS space, announced that its flagship knowledge management platform, Document360, has crossed $10 million in annual recurring revenue (ARR). The company has set a target to scale Document360 to $25 million ARR by 2028, fueled by accelerating global demand for AI-powered knowledge automation and a planned Rs.220 crore investment in its Coimbatore Development centre over the next three years. Saravana Kumar, Founder & CEO of Kovai.co expressed happiness on the new achievement.

## Online Bids Invited for Five-Year Fishing Lease at Pillur Dam till December 10

Online bids are now being invited for obtaining a five-year fishing lease at the Pillur Dam in Coimbatore district. The announcement was made through an official press release issued by District Collector Pavan Kumar.

According to the release, the fishing rights at Pillur Dam are administered under the control of the Erode District Fisheries and Fishermen Welfare Department. The department has opened the process for electronic tender submissions for leasing the fishing rights for a five-year period.

Interested applicants can download the tender application and all related documents free of cost from the official e-tender website. By entering the corresponding tender notification number, bidders can access the required forms without any fee.

The deadline for submitting online tenders is 9:00 a.m. on December 10. For clarifications regarding the tender process, applicants may send their queries to the email address mentioned in the tender notice or contact the office of the Assistant Director, Fisheries and Fishermen Welfare Department, Erode.

Any amendments or updates to the tender notification will be published exclusively on the official website. Applicants are advised to check the site regularly for the latest information.

For further details, interested individuals may visit or contact the Assistant Director's Office, Fisheries and Fishermen Welfare Department, Collectorate Annex Building, 7th Floor, Erode, or call 0424-2221912.

## Disha A Life School Hosts Pollachi's Largest Career & Admissions Conclave



THE KOVAI HERALD

Disha A Life School, in collaboration with Career Zone Academy, hosted Pollachi's first and largest multi-university Career & Admissions Conclave, attracting over 400 students and parents and bringing together 22 leading universities and institutions from across India. The event was inaugurated by Uma Ramanan, Principal of Disha A Life School.

This was followed by an insightful address by Nagalakshmi, Vice President of Career Zone Academy. The conclave saw participation from 36 representatives across 22 respected universities and institutions including Chanakya University, DJ Academy of Design, Amity University (Bengaluru & Noida), Dayananda Sagar University, Rathinam Institutions etc., making it the largest career engagement ever organized for school students in the Pollachi region.

## Coaching Classes for Group 2 and Group 2A Main Examinations to Begin on December 12

Integrated coaching classes for the Group 2 and Group 2A Main Competitive Examinations will commence on December 12, according to a press release issued by Coimbatore District Collector Pavan Kumar.

The Tamil Nadu Public Service Commission (TNPSC) had earlier announced 645 vacancies for Group 2 and Group 2A posts, for which the preliminary examination was held on September 29. Subsequently, an additional notification for 625 more vacancies was released on November 18, increasing opportunities for aspirants.

Following this, the Coimbatore District Employment and Career Guidance Centre will begin integrated coaching classes from December 12 to help candidates prepare for the upcoming Main examinations. The coaching will be conducted in both Tamil and English, led by experienced trainers.

The centre is equipped with facilities such as smart boards, free Wi-Fi, and a library containing books useful for competitive exams. Weekly tests and full-length model exams will also be conducted as part of the training programme.

Candidates who wish to join the coaching must fill out the Google form provided by the centre. For further details, they may visit the District Employment and Career Guidance Centre in person or contact the mobile numbers 94990 55937 or 93615 76081.

FOR NEWS Publication
9244317182
04223147962

## Grand Opening of Magarantham Associates in Coonoor



Magarantham Associates, a firm offering complete financial solutions, celebrated the grand opening of its new office at Bikketti Corner on Coonoor Main Road. The inauguration took place at Dr. Kanikkaraj Nagar, Aruvankadu, Coonoor. The event was attended by T. Shunmugasundaram, V. Hariharan, and A. Rajasekaran.

## Plastech & Wastech Expo 2025 in Coimbatore

Media Day Marketing, a leading B2B exhibition organizer in India, announced the inaugural, simultaneous hosting of Plastech Expo and Wastech Expo.

This premier dual-industry event will take place from December 11th to 13th, 2025, at the CODISSIA Trade Fair Complex in Coimbatore. This co-located expo is set to become the definitive hub for the plastic technology, waste management, and recycling sectors in South India. It will unite the entire value chain, from raw material suppliers and machinery manufacturers to recycling pioneers and sustainability consultants, fostering a comprehensive ecosystem for business and innovation.

The event is designed to address the industry's evolving needs by showcasing cutting-edge solutions that drive sustainability and the circular economy. Visitors will gain unparalleled access to the latest innovations in plastics, polymers, packaging, recycling technologies, waste-water treatment, bio-fertilizer solutions, and environmental services—all under one roof.




### மேற்கு புறவழிச்சாலை முதல் கட்டப் பணி ஜனவரியில் நிரைவு

# போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு கிடைக்குமா?



கோவை மாவட்டத்தில் போக்குவரத்துநெரிசல்பிரச்சனை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தொழில் வளர்ச்சி காரணமாக கோவைக்குபல்வேறுமாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில்இருந்துதினசரிஆயிரக்கணக்கான மக்கள் வருகை புரிகின்றனர். இதனால், நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், மைல்கல் முதல் நரசிம்மநாயக்கன் பாளையம் வரை மேற்கு புறவழிச்சாலை அமைக்கும் பணி தொடங்கி முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இந்தப் பணியின் முதல்கட்டம் வரும் ஜனவரி மாதத்தில் நிறைவடையும் எனதகவல் வெளியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்தபடியாக கோவை வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. கல்வி, மருத்துவம், ஐடி, உற்பத்தி உள்ளிட்டதுறைகளில்நகரம் முன்னேறி வருவதால், இந்திய அளவில் வேகமாக வளரும் நகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாக நகரின் போக்குவரத்து மற்றும் பிற வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்றகோரிக்கை வலுப்பெறுகிறது.

இந்தத் தேவையை முன்னிட்டு கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் கோவையின் பல பகுதிகளில்மேம்பாலங்கள் கட்டப்பட்டன. அவற்றில் தமிழ்நாட்டின் மிக நீளமான மேம்பாலம் அவிநாசிசாலையில் திறக்கப்பட்டது. விமான நிலைய விரிவாக்கத் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. மெட்ரோ ரயில் திட்டம் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கும்நிலையில், திமுக ஆட்சி வந்தபின் மேற்கு புறவழிச்சாலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் படி, மதுக்கரை அருகிலுள்ள மைல்கல் பகுதியில் தொடங்கி நரசிம்மநாயக்கன் பாளையம் வரை 32.40 கிலோமீட்டர் நீளத்தில் புறவழிச்சாலை அமைக்கப்படுகிறது. பணி மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு, முதல் கட்டமாக 11.8 கிலோமீட்டர் தொலைவிற்கு ரூ.250 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஒரு ஆண்டாக நடைபெற்று வரும் இந்தப் பணிகளில் சுமார் 7 கிலோமீட்டர் வரை முடிவடைந்துள்ளது. மீதமுள்ள 4 கிலோமீட்டர் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. மைல்கல் பகுதியில் பாலம் அமைக்கும் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்: “மைல்கல் மாதம்பட்டி இடையிலான 11.8 கிலோமீட்டர் பகுதியில் விபத்துகளை தடுக்கும் முன்னெச்சரிக்கைபணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு 100 மீட்டருக்கும் மின் விளக்குகள் அமைக்கப்படும். அபாய வளைவுகளுக்கு மலைப்பகுதி சாலைகளில் இருப்பதைப் போல பாதுகாப்பு தடுப்புகள் அமைக்கப்படும். மேலும், புறவழிச்சாலையை ஒட்டி உள்ள ஓடைகளில் மழைநீரை வெளியேற்ற வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன.”

அதிகாரிகள் மேலும் தெரிவித்ததாவது, “மாசுபாட்டை கட்டுப்படுத்த சாலையின் நடுவே அரளி செடிகள் நட்டுப் பராமரிக்கப்படும். கோவையின் இதமான காலநிலையை பேணுவதற்காக வழித்தடம் ஒட்டிய பகுதிகளில் மகிழம் மரக்கன்றுகள் நடப்படும். முதல்கட்டப் பணி ஜனவரி மாதத்திற்குள் நிறைவடையும். அதற்குப் பிறகு இரண்டாம் கட்டப் பணிகள் உடனே தொடங்கப்படும்.”

# அம்பேத்கர் - கலைஞர் பெயரில் லண்டன் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் படிப்பு

தி கோவை ஹெரால்டு

லண்டன் பல்கலைக் கழகத்தின் முக்கியப் பிரிவான எஸ்ஓஏஎஸ் (கிழக்கத்திய மற்றும் ஆப்பிரிக்க ஆய்வுகளுக்கான பள்ளி), ‘அம்பேத்கர் கலைஞர் சமூக நீதி மற்றும் கூட்டாட்சி வருகை ஆய்வாளர் படிப்பு’ என்ற புதிய ஆய்வுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அம்பேத்கர் மற்றும் முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியின் கண்ணியம், சமத்துவம், சமூக நீதி ஆகிய மதிப்புகளைக் கருத்தில் கொண்டு இந்தப் படிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மூன்று மாதங்கள் லண்டனில் தங்கி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள முடியும்.

இந்த ஆய்வுப் படிப்பு சபரீசன் வேதமூர்த்தி நிதியுதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது. இவர் இதற்கு முன், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகளும் சமூக செயற்பாட்டாளருமான செந்தாமரையுடன் இணைந்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலைஞர் பெயரில் ஒரு ஆய்வுப் படிப்பை நிறுவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிடம், ஜனநாயகம், கூட்டாட்சி, சமூகநீதி, மனித உரிமைகள் உள்ளிட்ட தலைப்புகளில் ஆய்வு செய்ய விருப்பமுள்ள ஆய்வாளர்கள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், கொள்கை வகுப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் எழுத்தாளர்கள் இந்த ஆய்வுப் படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம். குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கும், சமூகத்தின் விளிம்புநிலைப் பின்னணியிலிருந்து வருபவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

இந்தஆய்வுத்திட்டத்தின் கீழ் பயணச் செலவுகள், விசா கட்டணங்கள், மூன்று மாதங்களுக்கான உதவித்தொகை (ஸ்டைபெண்ட்), பல்கலைக்கழகக்கட்டணங்கள் உள்ளிட்ட அனைத்துச் செலவுகளுக்கும் முழுமையான நிதியுதவி வழங்கப்படும். இதன்மூலம், ஆய்வாளர்கள் லண்டனில் தங்கி எந்த பொருளாதாரச் சுமையுமின்றி முழுமையாக ஆய்வுப்பணிகளில் கவனம் செலுத்த இயலும்.

ஆய்வுப் படிப்பில் தேர்வாகும் மாணவர்கள் எஸ்ஓஏஎஸ் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கெடுப்பார்கள்.

தெற்காசிய நிறுவனத்தின் இயக்குநரிடமிருந்து வழிகாட்டுதல்கள் பெறுவதுடன், வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளில் கலந்துகொள்ள வாய்ப்பு வழங்கப்படும்.

ஆய்வு காலம் நிறைவடைந்தபின், அவர்களுக்கு அதற்கான சான்றிதழும் வழங்கப்படும்.

# 14 வயது சிறுவனை கூகுளில் தேடிய இந்தியர்கள்



தி கோவை ஹெரால்டு

பிகாரைச் சேர்ந்த 14 வயது சிறுவனான வைபவ் சூர்யவன்ஷிதான் 2025ம் ஆண்டு கூகுளில் அதிகம் தேடப்பட்ட இந்தியர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். இந்த பட்டியலில் உலகளவில் தேடப்பட்டவர்களில் போப் ஆண்டவர் Leo XIV முதலிடத்தில் உள்ளார்.

பீகார் அணிக்காக சூரியவன்சி ரஞ்சி டிராபியில் களம் இறங்கிய போது, இவருக்கு வயது 12 ஆண்டுகள் 284 நாட்கள்தான் ஆகியிருந்தது. உலகில் முதல் தர கிரிக்கெட் போட்டியில் விளையாடிய 8வது இளம் வீரர் இவர். 9 வயதில் இருந்து இவர் கிரிக்கெட் விளையாட தொடங்கியவர், 10 வயதில் இருந்தே சீனியர் வீரர்களுடன் விளையாட ஆரம்பித்து விட்டார்.

அதோடு, கடந்த ஐ.பி.எல் தொடரில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக 1.10 கோடிக்கு இவர் ஏலம் எடுக்கப்பட்டார். ஐ.பி.எல். தொடரில் விளையாடும் இளம் வீரர் இவர்தான். இந்த தொடரில் குஜராத் டைட்டன்ஸ் அணிக்கு எதிராக விளையாடிய போது, 38 பந்துகளில் சதம் அடித்துமிரட்டினார். ஐ.பி.எல். தொடரில் மிக வேகமாக அடிக்கப்பட்ட இரண்டாவது சதம் இது.

(ஐ.பி.எல் தொடரில் அதிவேகமாக சதம் அடித்த வீரர்களில் கிறிஸ் கெயில் முதலிடத்தில் உள்ளார். 2013ம் ஆண்டும் பெங்களூரு அணிக்காக விளையாடிய கெயில் புனே வாரியார்ஸ் அணிக்கு எதிராக 30 பந்துகளில் சதம் அடித்தார். )

ஐ.பி.எல்லில் சதம் அடித்த இளம் வீரர் என்று பல்வேறு சாதனைகளை அப்போது அவர் படைத்தார். இவர் பேட்டிங்கில் கன்சிஸ்டன்சி காட்டி வருவதுதான் கிரிக்கெட் நிபுணர்களை வியக்க வைக்கிறது.

கடந்த டிசம்பர் 2ம் தேதி சயீத் அலி முஸ்டாக் டி20 தொடரில் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற லீக் போட்டியில் பீகார் மற்றும் மகாராஷ்டிரா அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் சூரியவன்சி 58 பந்துகளில் 104 ரன்கள் அடித்து அசத்தினார். இதில்,7 சிக்ஸர்களும் அடக்கம்.

இந்த போட்டியில் பீகார் அணி தோற்றாலும், சூரியவன்சியின் ஆட்டம் அபாரமாக இருந்தது.

இப்படி கிரிக்கெட்டில் பல சாதனைகளை படித்து வரும் சூரிவன்சிதான் 2025ம் ஆண்டு கூகுளில் அதிகம் தேடப்பட்ட இந்தியர்கள் வரிசையில் முதலிடத்தில் உள்ளார். உலகளவில் இவருக்கு 6வது இடம்.

இந்திய கிரிக்கெட்டர்கள் பிரியான்ஷ் வர்மா, அபிஷேக் ஷர்மா ஆகியோரும் கூகுளில் அதிகளவில் தேடப்பட்டுள்ளனர். கடந்த மாதம் நடைபெற்ற மகளிர் உலகக்கோப்பை தொடரில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் 127 ரன்கள் அடித்த ஜெமிமா ரோட்ரிகஸ் கூகுளில் அதிகளவில் தேடப்பட்ட இந்தியர்கள் பட்டியலில் 5வது இடத்தில் உள்ளார்.

இந்தியாவில் விளையாட்டு தொடர்களை பொறுத்த வரை, ஐ.பி.எல் தொடர் முதலிடத்தில் வருகிறது. ஆசிய கோப்பை இரண்டாவது இடத்திலும் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி 3வது இடத்தையும் பிடிக்கிறது.

அதே வேளையில், ஆசியகோப்பை உலக அளவில் கூகுளில் அதிகம் தேடப்பட்ட விளையாட்டு தொடர்களில் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. முதலிடத்தை பிஃபா உலகக் கோப்பை பெற்றுள்ளது.

# திருநாளைப்போவார் நந்தனார் சிவபக்தியின் உயர்ந்த நாயனார்

தி கோவை ஹெரால்டு



சோழ நாட்டின் ஆதனூரில் புலையர் குலத்தில்பிறந்தநந்தனார், சிவபக்தியில்முழுமையாக ஆழ்ந்திருந்தார். ஆலயங்களுக்கு தோல், யாழ் நரம், கோரோசனம் முதலிய பொருட்களை வழங்கி திருப்பணிகளைச் செய்து வந்தார். பல தலங்களில்சுவாமிதரிசனம் செய்து வந்த அவர், திருப்புன்கூரில் சுவாமி அவருக்காக இடபதேவரை விலக்கிகாட்சிஅளித்ததும் ஒரு அதிசயம்.

நந்தனாரின் மனதில் சிதம்பரத்தை தரிசிக்க வேண்டும் என்ற பேராசை எழுந்தது. ஆனால் தாம் தாழ்ந்த சாதியில் பிறந்ததால்கோயிலுக்குள் பிரவேசிக்க முடியாது என்று நினைத்து, தினமும் “நாளைக்குப் போவேன்” என்று தயங்கி வந்தார். இதனால் அவரை மக்கள் “திருநாளைப்போவார்” என்று அழைக்கத் தொடங்கினர்.

ஒருநாள் தீர்மானித்து சிதம்பரத்திற்குச் சென்ற அவர், நகர எல்லையில் நின்று உள்ளே செல்லத் தயங்கினார். இரவும் பகலும் கோயிலைச் சுற்றி வலஞ்செய்து, பிரவேசிக்க முடியாத தம் பிறப்புக்கு வருந்திச் சோகத்தில் உறங்கினார். அந்த இரவு சபாநாயகர் அவருக்கு சொப்பனத்திலே தோன்றி, “இந்தப் பிறப்பு நீங்க நெருப்பில் மூழ்கி எழுந்து எங்களை தரிசிக்கலாம்” என்றுஅருளுரைதருகிறார். அதேபோல் தில்லை பிராமணர்களுக்கும் சொப்பனத்திலே நாயனாருக்காக நெருப்பு ஏற்படுத்துமாறு உத்தரவு கிடைக்கிறது.

பிராமணர்கள் வந்து சபாநாயகர் ஆணையை அறிவித்தபோது, நந்தனார் மகிழ்ச்சியுடன் சம்மதித்து, நெருப்பில் இறங்குகிறார். நெருப்பிலிருந்து எழுந்தபோது, அவர் பிராமண முனிவர் போன்ற பவித்திரமான வடிவத்துடன்தோன்றினார். பின்னர் அவரை எல்லோரும் அழைத்து சிதம்பர கோயிலுக்குள் கொண்டுபோய், கனக சபையில் சபாநாயகரை தரிசிக்கச் செய்கிறார்கள். அங்குசபாநாயகர்அவருக்கு தமது திருவடிகளை அருளுகின்றார்.

# ஏ.வி.எம். சரவணனுக்கு எம்.ஜி.ஆர். செய்த உதவி



வெள்ளை உடை, கைகட்டிக் கொண்டு பணிவோடு இருக்கும் தோற்றம், கனிவான பேச்சு என தனித்த அடையாளத்துடன், திரைத்துறையில் இந்த நம்பிக்கையை கட்டி எழுப்பியவர் ஏவிஎம் சரவணன். சிறு வயதில் தான் அவ்வளவாக சினிமா பார்க்க மாட்டேன் என்று கூறிய இவர் தான், தமிழ் சினிமாவில் பல வெற்றிப் படங்களை தயாரித்து, ரஜினி, கமல் உள்ளிட்ட உச்ச நடிகர்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்டவர். மெய்யப்ப செட்டியாருக்கு 1939ஆம் ஆண்டு 3ஆவது மகனாக பிறந்த சரவணன், தனது தந்தையால் 1945-இல் தொடங்கப்பட்ட ஏவிஎம் நிறுவனத்தை 1958-ஆம் ஆண்டு முதல் நிர்வகித்துவந்தார். கதைத்தேர்வில் கை தேர்ந்தவரான ஏவிஎம் சரவணன், கமர்ஷியல்மட்டுமின்றிகுடும்பஉறவுமுறைகள் தொடர்பான எதார்த்த படங்களையும் தயாரித்து வெற்றிகண்டவர். குறிப்பாக, முரட்டுக்காளை, போக்கிரிராஜா, பாயும்புலி, நல்லவனுக்கு நல்லவன், மிஸ்டர் பாரத், மனிதன், ராஜா சின்ன ரோஜா, எஜமான், சிவாஜி என ரஜினியின் பெரும்பாலான ஹிட் படங்கள் ஏவிஎம் சரவணன் தயாரித்தது தான். அதேபோன்று, சகலகலா வல்லவன், தூங்காதே தம்பி தூங்காதே, உயர்ந்த உள்ளம், பேர் சொல்லும் பிள்ளை என கமல் நடித்த பல வெற்றிப் படங்களை ஏவிஎம் சரவணன் தயாரித்தார். விஜயகாந்த் நடிப்பில் சிவப்பு மல்லி, வெள்ளை புறா ஒன்று, தர்ம தேவதை, மாநகர காவல், சேதுபதி ஐபிஎஸ் உள்ளிட்டபடங்கள் ஏவிஎம் தயாரிப்பில் வெளிவந்தன. தமிழ் சினிமாவில் தனக்கென தனி இடம் பிடித்த ஏவிஎம் சரவணன் உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 89. ஏ.வி.எம் சரவணனுக்கு, நடிகரும், முன்னாள் முதல்வருமான எம்.ஜி.ஆர் உதவியது குறித்த தகவல் தற்போது பரவி வருகிறது. கடந்த 1966-ம் ஆண்டு வெளியாகி சூப்பர் ஹிட்டான திரைப்படம் ‘அன்பே வா’. இந்தப் படத்தில் எம்ஜிஆர், சரோஜாதேவி, நாகேஷ் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். இந்தப் படத்தை ஏவிஎம் சரவணன் தயாரித்திருந்தார். படத்தின் ஷூட்டிங் சிம்லாவில் நடைபெற்றது. மிகவும் குளிரான பகுதி என்பதால் ஏவிஎம் சரவணனுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டு அவருக்கு தொண்டை வறண்டு போயுள்ளது. இதனால் சோர்ந்து போன அவர் ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்தாலும் காரிலேயே இருந்துள்ளார். இதுபற்றிய விபரம் எம்.ஜி.ஆருக்கு தெரிய வந்துள்ளது. இதையடு ஒரு டம்ளரில் சூடான பாலை எம்.ஜி.ஆரே கொண்டு சென்று சரவணனுக்கு கொடுத்துள்ளார். அப்போது எம்ஜிஆரிடம் கேட்ட சரவணன், ‘இதை நீங்கள் ஏன் கொண்டு வந்தீர்கள்? பணியாளர் யாரிடமாவது கொடுத்து அனுப்பியிருந்தால் நான் வாங்கியிருப்பேன் அல்லவா!’ என்று சொல்லியுள்ளார். இதற்கு பதிலளித்த எம்ஜிஆர் நான் அப்படி செய்தால் நீங்கள் மறுப்பு தெரிவித்திருக்க கூடும். ஆனால் நான் சொன்னால் நீங்கள் கண்டிப்பாக குடிப்பீர்கள் என்பதால், நானே கொண்டுவந்தேன். இதை குடியுங்கள். என்று கூறியுள்ளார். அந்த வகையில் எம்ஜிஆர் நேசித்த ஒருவராக இருந்தவர் ஏவிஎம் சரவணன்.

# டெங்கு காய்ச்சலில் இருந்து தப்பிப்பது எப்படி?



கடந்தமூன்றுநாட்களாக பெய்த மழையின் காரணமாக தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு பரவலாக அதிகரித்துள்ளது. குறிப்பாக சென்னை, கோவை, தஞ்சாவூர், கடலூர், மதுரை, வேலூர், உள்ளிட்ட மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரித்துள்ளதாக தமிழக பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

தமிழகம் முழுவதும் டெங்குவால் நாள்தோறும் 100 முதல் 120 பேர் வரை பாதிக்கப்படுவதாகவும், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் நாள்தோறும் 25 முதல் 30 பேர் டெங்கு காய்ச்சலால் பாதித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அரிதாகவே டெங்கு கடுமையானதாக மாறி மரணத்திற்குவழிவகுக்கும். டெங்கு காய்ச்சலுக்கு குறிப்பிட்ட சிகிச்சைகள் எதுவும் இல்லை. டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் என்ன, வராமல் இருக்க என்னென்ன முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்துப் பார்ப்போம். தேங்கியுள்ள மழைநீரில் உற்பத்தியாகும் ஏடிஸ் வகை கொசுக்கள் கடிப்பதால் டெங்கு காய்ச்சல் ஏற்படுகிறது.

### டெங்கு காய்ச்சல் அறிகுறிகள்

அதிக காய்ச்சல் (104 டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேல்), கடுமையான தலைவலி, கண்களுக்குப் பின்னால் வலி, தசை மற்றும் மூட்டு வலிகள், குமட்டல், வாந்தி, வீங்கிய நிணநீர் முனைகள்

### டெங்கு காய்ச்சல் வருவதை தடுப்பது எப்படி?

டெங்குவைப் பரப்பும் கொசுக்கள் பகலில் சுறுசுறுப்பாக இருக்கும். ஆகவே, கொசுக்கடியில் இருந்து பாதுகாக்க உடலை முடிந்தவரை மறைக்கும் ஆடைகளை அணிய வேண்டும்.

பகலில் தூங்கினால் கொசுவலையை பயன்படுத்த வேண்டும்.

வீட்டு சன்னலை திரையிட்டு மூடிவிட வேண்டும்

கொசு பேட், கொசு வர்த்தி, ஆல்அவுட் உள்ளிட்ட கொசு விரட்டிகளை பயன்படுத்தலாம்

வீட்டின் அருகில் குட்டை போல தண்ணீர் தேங்கியிருந்தால் உடனே அகற்ற வேண்டும்

வீட்டில் குப்பைகள் சேராமல் உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்

வீட்டில் நீர்பிடித்து வைக்கும் பாத்திரங்களை வாரத்திற்கு ஒருமுறையாவது சுத்தம் செய்ய வேண்டும்

டெங்கு காய்ச்சல் கண்டறியப்பட்டால் என்ன செய்வது?

### ஓய்வு எடுக்க வேண்டும்

அடிக்கடி தண்ணீர் குடித்துக்கொண்டே இருக்க வேண்டும்

மருத்துவர்களின் பரிந்துரைத்த மாத்திரை, மருந்துகளை சரியாக சாப்பிட வேண்டும்

டெங்கு அறிகுறிகள் கடுமையானதாக இருந்தால் உடனே மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெற வேண்டும்.

## டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி

# “ஸ்ட்ரீம் மைன்ட்ஸ் விசன் 2030”




தி கோவை ஹெரால்டு

டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறை மற்றும் ராபிட் ஃப்யூச்சர் டெக்னாலஜி இணைந்து “ஸ்ட்ரீம் மைன்ட்ஸ் விசன் 2030: இன்டர்-ஸ்கூல் ஸ்டீம் சாம்பியன்ஷிப் 2025” என்ற புதுமையான மற்றும் தூண்டுதல் மிகுந்த நிகழ்வை நடத்தினர். இந்தச் சாம்பியன்ஷிப்புக்கு டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ். சரவணன், அகாடமிக் டீன் டாக்டர் கே. ராமமூர்த்தி, துறைத் தலைவர் டாக்டர். கே.கிரிஜா மற்றும் ராபிட் ஃப்யூச்சர் டெக்னாலஜி இயக்குனர்கள் பி. ஜெயக்குமார், கோ .பிரவீன்குமார் , ப.தியாகராஜு- ஆகியோர் தலைமை தாங்கி வாழ்த்துகளை வழங்கினர். நிகழ்ச்சியின் தலைமை விருந்தினராக இருந்த ஏஜசி அமிர்தா இன்க்யூபேட்டர் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் பி. உமா மகேஸ்வரி கலந்து கொண்டார்.

# மகனுக்கு இந்திய விஞ்ஞானி பெயர் சூட்டியது ஏன்? - மஸ்க் விளக்கம்



உலக பணக்காரரான எலன் மஸ்க் டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ், நியூராலிங்க், எக்ஸ் எனப் பல நிறுவனங்களை நடத்தி வருகிறார்.

தென்னாப்பிரிக்காவில் பிறந்த இவர், பின்னர் அமெரிக்காவில் குடியேறினார். 2000ம் ஆண்டு எலன் மஸ்க் ஜஸ்டின் வில்சன் என்பவரை மணந்தார். 2008ம் ஆண்டு இந்த திருமணம் முறிந்தது. இவருக்கு 4 மனைவிகள் என்று சொல்கிறார்கள். மொத்தம் 14 குழந்தைகளுக்கு எலன் மஸ்க் தந்தை.

கடைசியாக, நியூராலிங்க் நிறுவனத்தில் பணிபுரியும் ஷிவான் சிலிஸ் என்ற பெண் ஊழியருடன் எலன் மஸ்க் 14-வது குழந்தையைப் பெற்றெடுத்தார். எலன் மஸ்க்குக்கு ஒரு திருநங்கை மகளும் உண்டு. இவரின் பெயர் சேவியர் மஸ்க். தனது தந்தையின் பெயரை சேவியர் துறந்துவிட்டார். எலன் மஸ்க்குடன் எந்த ரீதியிலும் தொடர்பு வைத்திருக்கவில்லை என்று சேவியர் மஸ்க் வெளிப்படையாகவே கூறி விட்டார். தனது பெயரை விவியன் ஜென்னா என்றும் மாற்றிக் கொண்டார்.

எலன் மஸ்க் குழந்தைகளை பெற்றுக்கொள்வதை அதிகம் விரும்புகிறார். பிறப்பு விகிதம் குறைய கூடாது என்பது அவரின் கருத்தாக உள்ளது.

இந்த நிலையில், நோபல் பரிசு வென்ற இந்திய விஞ்ஞானியின் பெயரை தனது மகனுக்கு சூட்டியது குறித்து நிகில் காமத் பாட்காஸ்ட் நிகழ்ச்சி ஒன்றில் எலன் மஸ்க் மனம் திறந்து பேசியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது, ‘எனது பார்ட்னர் ஷிவான் சிலிஸ் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். உங்களுக்கு அது பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதன் காரணமாகவே எங்களுக்கு பிறந்த மகனுக்கு ‘சேகர ‘ என்ற மிடில் பெயரை சூட்டியுள்ளோம். 1983ம் ஆண்டு நோபல் பரிசு வென்ற சுப்ரமணியன் சந்திரசேகரின் நினைவாகவே இந்த பெயரை சூட்டினோம். ஷிவான் இந்தியாவில் வாழவில்லை. ஆனால், அவர் குழந்தையாக இருந்த போது தத்தெடுக்கப் பட்டுள்ளார்.

பின்னர், தனது வாழ்க்கையை கனடாவில் தொடங்கினார். ஒரு தந்தையாக எனது வாழ்க்கையை நிறைவாகவே வாழ்கிறேன் ‘என்றார்.

ஹெச்1 பி விசா பற்றி கேட்ட போது, எலன் மஸ்க் கூறியதாவது, ‘இந்தியர்களின் திறமையால் அமெரிக்காதான் அதிகம் வளர்ச்சி பெற்றுள்ளது. ஹெச்-1 பி விசா விஷயத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளது. எனவே, இதை கட்டுப்படுத்தவே டிரம்ப் அரசு கடுமையான கட்டுப்பாடுகளை கொண்டு வந்துள்ளது.

இதுவும், தேவையான தாகவே நான் கருதுகிறேன். ஹெச்- 1 பி விசா வழங்கப்படுவது முற்றிலும் நிறுத்தப்பட்டுவிடக்கூடாது என்பதே எனது கருத்து’ என்று தெரிவித்தார்.

எலன் மஸ்க்கின் பார்ட்னர் ஷிவான் சிலிஸ் கடந்த 2017ம் ஆண்டு நியூராலிங் நிறுவனத்தில் இணைந்தார். தற்போது, அந்த நிறுவனத்தின் இயக்குனராகவும் சிறப்பு செயல்பாட்டுத்துறையின் தலைவராகவும் உள்ளார். கனடாவிலுள்ள ஒன்டாரியோ நகரில் வளர்ந்தவர்.

அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலையில் பொருளாதாரம் மற்றும் தத்துவத்தில் பட்டம் பெற்றவர். நியூராலிங் நிறுவனத்தில் இணைவதற்கு முன்னதாக ஐ.பி.எம், பூமாரங் போன்ற நிறுவனங்களில் பணி புரிந்தார்.

எலன் மஸ்க்குடன் ஷிவானுக்கு 4 குழந்தைகள் உள்ளனர். இதில், Strider, Azure ஆகியோர் இரட்டை குழந்தைகள். அடுத்து Arcadia என்ற மகளும் seldon Lycurgus என்ற இளைய மகனும் உண்டு.

# தமிழகத்தில் முக வாதம் ஏற்படும் ஆபத்து மருத்துவர்கள் எச்சரிக்கை

தமிழகம் முழுவதும் ‘டித்வா’ புயல் மற்றும் பருவமழை காரணமாக வெப்பநிலை திடீரென குறைந்து குளிர்ந்த கால நிலைநிலவிவருகிறது. இந்த சூழலில், முதியோர் மற்றும் இணை நோய்களுடன் வாழ்பவர்களுக்கு “ஃபேஸ் பெராலிசிஸ்” எனப்படும் முக வாதம் ஏற்படும் அபாயம் அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

முகத்தில் உள்ள தசைகளுக்கு உணர்வு அளிக்கும் நரம்பில் திடீரென ஏற்படும் அழுத்தம், அழற்சி அல்லது வைரஸ் தொற்று காரணமாக இந்த நோய் தோன்றுகிறது. இது பக்கவாதத்திலிருந்து வேறுபட்டது என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

முக வாதம் ஏற்பட்டால் வாயைச்சுளுக்கமுடியாமை, உதடுகள் ஒரு பக்கமாக இழுத்தல், ஒருகண் முழுமையாக மூட முடியாமை, பேசும் போது வாய் குளறுதல், உமிழ்நீர் கட்டுப்பாட்டின்மை போன்ற அறிகுறிகள் தோன்றும். இதனை அலட்சியப்படுத்தாமல் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும் என நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

இது தொடர்பாக முதுநிலை பொதுநல மருத்துவ நிபுணர் டாக்டர் அ.ப. ஃபரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார். குளிர்ந்த காற்று நேரடியாக முகத்தில் படுவதை தவிர்ப்பது மிக முக்கியம் என அவர் கூறுகிறார். குளிர்ந்த தரையில் பாய், தலையணை அல்லது விரிப்பு இல்லாமல் படுக்கும் பழக்கத்தையும் தவிர்க்க வேண்டும். இது நரம்பில் அழுத்தத்தை ஏற்படுத்தி முக வாதத்திற்குச் சூழ்நிலையை உருவாக்கக்கூடும்.

கார், பேருந்து, ரயில் பயணங்களின்போது காற்று காது அல்லது கன்னத்தில் நேரடியாகப் படாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம். ஏசி பயன்படுத்தும்போது காற்று நேரடியாக முகத்தைத் தொட்டுவிடாதபடி கவனிக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

இந்தப் பாதிப்பு ஏற்பட்டால் முழுமையாக குணமடைய 2 முதல் 4 மாதங்கள் வரை ஆகும். ஆரம்பகட்டத்தில் ஸ்டீராய்டு மற்றும் ஆன்டி வைரல் மருந்துகள் வழங்கப்படும். பின்னர் இயன்முறை சிகிச்சை (Physiotherapy) தேவைப்படும். மேலும் கண்கள் திறந்தே இருக்கும் நிலையில், கண் உலர்ச்சி ஏற்படாமல் இருக்க கண் சொட்டு மருந்து பயன்படுத்தலாம் என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

# அம்பேத்கர் வாழ்வு ஒரு பாடம் - முதல்வர் ஸ்டாலின்



அம்பேத்கரின் போராட்டங்களே சமத்துவச் சமூகத்தை நோக்கிய பயணத்தில் நமக்கு ஊக்கம். அண்ணல் அம்பேத்கர் பேரொளியின் வெளிச்சத்தில் தொடர்ந்து முன்னேறுவோம். அம்பேத்கர் வாழ்வு ஒரு பாடம்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கரின் 70-வது நினைவுதினம் அனுசரிக்கப் பட்டது. அவரது உருவப் படத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலரஞ்சலி செலுத்தினார். அம்பேத்கர் குறித்து தனது எக்ஸ் தளப் பக்கத்தில் முதல்வர் ஸ்டாலின் பகிர்ந்த தகவல், “புரட்டுகளைப் பொசுக்கிய புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாள், எல்லா விதத்திலும் தன்னை அடக்கி ஒடுக்கும் ஓர் அமைப்புக்குள் இருந்து, கல்வி எனும் ஆயுதத்தால் அனைத்தையும் தகர்த்தெறிந்துமேலெழுந்த அறிவுச்சூரியன்தான் அம்பேத்கர்.

அவரை அடக்க நினைத்த அதே ஆதிக்கக் கூட்டம் இன்று அவரைத் துதிப்பதுபோல நடிக்கிறதே, அதுதான் அவரது வெற்றி. அவரது வாழ்வே ஒரு பாடம், அவரது போராட்டங்களே சமத்துவச் சமூகத்தை நோக்கிய பயணத்தில் நமக்கு ஊக்கம், அண்ணல் அம்பேத்கர் எனும் பேரொளியின் வெளிச்சத்தில் தொடர்ந்து முன்னேறுவோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## தமிழக பாஜகவுக்கு டாக்டர் அனுஷா ரவி நன்றி

தி கோவை ஹெரால்டு

தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் விளையாட்டுத் துறை மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு மாநிலச் செயலாளராக தன்னை நியமித்த தலைமைக்கு டாக்டர் அனுஷா ரவி நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

விளையாட்டுத் துறை மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவின் மாநில ஒருங்கிணைப்பாளர் நயினார் பாலாஜிக்கும் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் எம்எல்ஏ மற்றும் மாநில பொதுச் செயலாளர் (அமைப்பு) கேசவ விநாயகத்துக்கு தனிப்பட்ட முறையில் நன்றியை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், “இது ஒரு பொறுப்பு மட்டுமல்ல; எனது திறமையிலும் தமிழ்நாடு



டாக்டர் அனுஷா ரவி

தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் விளையாட்டுத் துறை மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு மாநிலச் செயலாளர்.

இளைஞர்கள் மீது நான் கொண்டுள்ள அக்கறையின் மீதும் வைக்கப்பட்டுள்ள மாபெரும் நம்பிக்கை

அமெரிக்காவில் தொழில்நுட்பம் மற்றும் கல்வி சார்ந்த துறைகளில் பணியாற்றிய அனுபவம் எனக்கு உண்டு. கடந்த இருபது ஆண்டுகளாக இளைஞர்களோடு நேரடி தொடர்பு கொண்டு பணியாற்றிய அனுபவமும் இருப்பதால், மாணவர்களை திறன் மேம்பாட்டில் முன்னேற்றவும், அவர்களை வளர்ச்சி பாதைக்க உயர்த்தவும் அர்ப்பணித்து கொண்டுள்ளேன்.

பிரதமர் நரேந்திர மோடி “விக்சித் பாரத்” (முன்னேறிய இந்தியா) என்ற நோக்கத்தை முன்னெடுத்துச் செல்ல எனது முழு உழைப்பையும், ஆற்றலையும் தருவேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளா.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில் மாவட்ட அளவிலான இளைஞர் திருவிழா




மத்திய அரசின்

தி கோவை ஹெரால்டு

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணித் திட்டம், ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில், மாவட்ட அளவிலான இளைஞர் திருவிழா, கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

இதன் தொடக்க விழாவிற்கு ஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல்.சிவக்குமார் தலைமை வகித்தார். எஸ்.என்.ஆர்., சன்ஸ் அறக்கட்டளை தலைமை நிர்வாக அதிகாரி டி.மகேஷ்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, இளைஞர் திருவிழாவைத் தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து இந்திய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் நாட்டுப்புற குழு நடனம், நாட்டுப்புற குழு பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்திய அரசியல் சாசனம் மற்றும் தற்போதைய காலச்சூழல், ஜனநாயகத்தின் மாண்புகள் மற்றும் பாதுகாப்பை விளக்கும் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதே போல் இளைஞர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஓவியம் வரைதல், கதை எழுதுதல், கவிதை எழுதுதல், முக்கிய குறிப்புகள் எழுதுதல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. இவற்றில் கோவை மாவட்டத்தில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் எஸ்.பிரகதீஸ்வரன் மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர்.

முன்னதாக நாட்டு நலப்பணித் திட்ட மாணவி பி.ஸ்வாதி வரவேற்றுப் பேசினார். முடிவில் மாணவர் அஜய் அர்ஸ் நன்றி கூறினார்.

## 1.5 பில்லியன் ஆண்டுகள் பழமையான சுழல் அண்டத்தை கண்டுபிடித்த இந்திய வானியலாளர்கள்

இந்திய வானியலாளர்கள் மிக முக்கியமான வானியல் கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளனர். சுமார் 1.5 பில்லியன் ஆண்டுகள் பழமையான காலத்தைச் சேர்ந்த சுழல் அண்டம் ஒன்றை அவர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த புதிய அண்டம், அதன் பருமன், அமைப்பு மற்றும் கண்கொள்ளாக் காட்சியமைப்பால் வானியலாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.



பிரபஞ்சத்தின் தற்போதைய வயது சுமார் 13.8 பில்லியன் ஆண்டுகள் எனக் கருதப்படும் நிலையில், அதன் வயதில் பத்தில் ஒரு பங்குக்கு மிகக் குறைவு வயதை உடைய இவ்வண்டத்தை கண்டறிதல், வானியல் துறையில் மிக முக்கியமான முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

இவ்வளவு பழமையான காலத்திலேயே இப்படியான சீரான வடிவமைப்பு கொண்ட சுழல் அண்டம் இருந்திருக்கிறது என்பது பிரபஞ்ச உருவாக்கம் மற்றும் அண்ட வளர்ச்சி குறித்து புதிய கேள்விகளை எழுப்புகிறது.

இந்த ஆய்வை மேற்கொண்டுள்ள இந்திய வானியலாளர்கள் குழுவின் கண்டுபிடிப்பு, ஐரோப்பிய அறிவியல் இதழான Astronomy and Astrophysics ஜர்னலின் நவம்பர் மாத வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்திய வானியல் ஆராய்ச்சி சர்வதேச அறிவியல் உலகில் மேலும் ஒரு முக்கிய சாதனையைப் பதிவு செய்துள்ளது.

இந்த கண்டுபிடிப்பு, பிரபஞ்சத்தின் ஆரம்பகால கட்டங்களைப் பற்றிய புரிதலை மேலும் விரிவுபடுத்தும் என்பதில் வானியலாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## கோர்டிஸ் இரண்டு செல்யூஷன் எஸ்.எல்.ஆர். டி.இ.பி. ஆய்வுகளுக்கான முடிவுகள் வெளியீடு

இன்டர்வென்ஷனல் கார்டியோவாஸ்குலார் தொழில்நுட்பத்தில் உலகளவில் முன்னணி நிறுவனமான கோர்டிஸ், செல்யூஷன் டிநோவோ மற்றும் செல்யூஷன்4 ஐஎஸ்ஆர் செல்யூஷன் 4 எஸ்.எல்.ஆர். என்ற இரண்டு முக்கியமான ஆய்வுகளின் முடிவுகளை டிரான்ஸ்கேதெரர் கார்டியோவாஸ்குலர் தெரப்யுடிக்ஸ் 2025 மாநாட்டில் வெளியிட்டது. இந்த மாநாடு கார்டியோவாஸ்குலர் ரிசர்ச் ஃபவுண்டேஷன் நடத்தும் ஆண்டு அறிவியல் கருத்தரங்காகும்.

“இந்தியாவில் நடைபெற்ற முதல் செல்யுஷன் ஆய்வில் இணை - முதன்மை ஆராய்ச்சியாளராக இருந்ததிலிருந்து, இந்த தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தை நான் மிகுந்த ஆர்வத்துடன் கவனித்து வருகிறேன்,” என்று கோயம்புத்தூர் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் மூத்த இதய நிபுணர் டாக்டர் எஸ்.பாலாஜி கூறினார்.

## இனி தட்கல் டிக்கெட் முன்பதிவுக்கு ஓடிபி கட்டாயம்

ரயில்வே முன்பதிவு கவுன்டர்களில் தட்கல் டிக்கெட்டுகளைப் பெறுவது இனி மேலும் கட்டுப்பாடுகளுடன் நடைபெறும். பயணிகள் தங்களின் மொபைல் எண்ணில் வரும் ஓடிபியை வழங்கியதுதான் டிக்கெட் உறுதிப்படுத்தப்படும். கடைசி நேர முன்பதிவில் நடைபெறும் தவறுகள் மற்றும் தவறான பயன்பாட்டைத் தடுக்கவும், உண்மையான பயணிகள் மட்டுமே தட்கல் டிக்கெட் பெறச் செய்யவும் ரயில்வே அமைச்சகம் இந்த புதிய முறையை அறிமுகப் படுத்தியுள்ளது.

இந்த ஓடிபி அடிப்படையிலான சரிபார்ப்பு முறை முதலில் நவம்பர் 17 முதல் சோதனை அடிப்படையில் சில ரயில்களில் செயல்படுத்தப்பட்டது. தற்போது இது 52 ரயில்களுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளதுடன், விரைவில் அனைத்து ரயில்களுக்கும் அமல்படுத்தப்பட உள்ளது என்று ரயில்வே தெரிவித்துள்ளது.

தட்கல் டிக்கெட்டை கவுன்டரில் முன்பதிவு செய்யும்போது, பயணிகள் வழங்கும் படிவத்தில் குறிப்பிடப்படும் மொபைல் எண்ணுக்கு ஓடிபி அனுப்பப்படும். அந்த ஓடிபியை சரியாக பதிவு செய்தால்தான் முன்பதிவு செயல்முறை முடிவடையும். இந்த மாற்றம், முன்பதிவு முகவர்கள் மூலம் நடைபெறும் தவறான முன்பதிவுகளைத் தடுக்கவும், அதிக தேவை உள்ள தட்கல் டிக்கெட்டுகள் உண்மையில் பயணம் செய்யும் பயணிகளுக்கே கிடைக்கச் செய்யவும் முக்கிய பங்கு வகிக்கிறது என அதிகாரிகள் விளக்கினர்.

மேலும், இந்த செயல்முறை முன்பதிவு முறைமையில் வெளிப்படைத்தன்மையும் பாதுகாப்பும் அதிகரிக்க உதவும் என்றும் கூறப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக ரயில்வே பல புதிய விதிமுறைகளை அறிவித்து வருகிறது. ஜூலை மாதத்தில், ஆன்லைன் தட்கல் டிக்கெட் முன்பதிவுக்கு ஓடிபி ஆதார் சரிபார்ப்பு கட்டாயமாக்கப்பட்டது. அதன் பின்னர் அக்டோபர் 1 முதல், ஆன்லைன் பொது முன்பதிவின் முதல் 15 நிமிடங்களில் ஆதார் அங்கீகாரம் பெற்ற பயனர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது.

பயணிகளுக்கு சமமான அணுகலை, பாதுகாப்பான முன்பதிவை, மற்றும் நீதி மிக்க டிக்கெட் பகிர்வை உறுதி செய்யும் ரயில்வே அமைச்சகத்தின் தொடர்ச்சியான முயற்சிகளில், இந்த புதிய நடவடிக்கை இன்னொரு முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது.




## போலீசார்தான் கொலை செய்ய தூண்டினர்- ஆஞ்சல் குற்றச்சாட்டு

மீடியாக்களிடம் பேசிய ஆஞ்சல்கூறியிருப்பதாவது, ‘‘சாக்சம் கொல்லப்பட்ட தினத்தன்று காலையில் எனது சகோதரர் என்னை போலீஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றார். அங்கே, சாக்சம் மீது பொய்யான புகார் கொடுக்க என்னை வற்புறுத்தினார். ஆனால், நான் புகார் கொடுக்க மறுத்துவிட்டேன். அப்போது, அங்கேயிருந்த போலீஸ்காரர்கள், ‘இப்படி போலிபுகாரை கொடுப்பதை விட சாக்சனை கொன்று விட வேண்டியதுதானே..’ அதற்கு உனக்கு தைரியம் உள்ளதா? என்று எனது சகோதரரிடத்தில் கேலியாக கூறினார்.



இதை, சவாலாக எடுத்துக் கொண்ட எனது சகோதரர் அன்றைய தினம் மாலையே சாக்சமை கொன்று விட்டார். எனது காதலர் பிற மதத்தை சேர்ந்தவர். என்னை திருமணம் செய்ய வேண்டுமென்றால், ஹிந்து மதத்துக்கு மாற வேண்டுமென்று எனது பெற்றோர் கூறினர். அதற்கும், சாக்சம் ஒப்புக் கொண்டுவிட்டார். ஆனால், எனது குடும்பத்தினர் எனது காதலரை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேயே இருந்துள்ளனர். எனது காதலர் கொல்லப்பட்ட தினத்தன்று காலையில் அவரிடத்தில் பேசினேன். ஆனால், அடுத்த நாள் காலை சாக்சம் கொலை செய்யப்பட்டு விட்டதாக செய்திதாள்களில் செய்தி இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தேன். எனது காதலரை கொலை செய்த எனது தந்தை, சகோதரர்கள் இருவருக்கும் தூக்குத்தண்டனை வழங்க வேண்டும். அப்போதுதான், எனது காதலர் கொலைக்கு நீதி கிடைக்கும்’’ என்று தெரிவித்துள்ளார்.

இந்தவழக்குதொடர்பாக கொலை செய்யப்பட்ட சாக்சமின் தாயிடத்தில் இருந்து போலீசார் புகார் பெற்றுள்ளனர். சாக்சமை கொலை செய்ததாக ஆஞ்சலின் தந்தை காஞ்சன் மாலிவார் , சகோதரர்கள் ஷகீர் , ஹிமேஸ் உள்ளிட்ட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட சாக்சம் கிரிமினல் பின்னணி கொண்டவர். 8 முதல் 10 வழக்குகள் அவர் மீது உள்ளது. சமீபத்தில் சிறையில் இருந்து வெளி வந்தவர் . அதே போல, ஆஞ்சலின் தந்தை, சகோதரர் மீதும் வழக்குகள் உள்ளன என்று நன்டெட் எஸ்.பி அபினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 9-ம் ஆண்டு நினைவு நாள் கோவையில் அனுசரிப்பு



முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா 9-வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மலர் தூவி மரியாதை செலுத்திய சட்டமன்ற உறுப்பினர்கள் கே.அம்மன் அர்ச்சுணன், கே.ஆர்.ஜெயராம், முன்னாள் அமைச்சர் செ.மா.வேலுச்சாமி, சிங்கை ராமச்சந்திரன், இளைஞர், இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் பப்பாயா ராஜேஷ், மாவட்ட துணை செயலாளர் நர்மதா தேவி, மாவட்ட இணை செயலாளர்கள் வி.ராஜபிரவு, ஆர். விஜிதாரு, பகுதி செயலாளர்கள் காட்டூர் செல்வராஜ், ராஜ்குமார், ஏ.ஜெ.செல்வகுமார், சி.டி.சி.ஜபார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



கோவை கவுண்டம்பாளையத்தில் முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவின் 9-வது நினைவு நாளையொட்டி அவரது திருவுருவ சிலைக்கு மாலையிட்டு மரியாதை செலுத்தினார். கோவை புறநகர் மாவட்ட செயலாளர், கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி.அருண்குமார். உடன், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய செயலாளர் கே.வி.என்.ஜெயராம், வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள்.

## தற்கொலைப்படையாக மாறும் பலூச் பெண்கள்; தவிக்கும் பாகிஸ்தான்

பாகிஸ்தானின் தெற்கு எல்லையில் பலூசிஸ்தான் அமைந்துள்ளது. இந்த மாகாணத்தை சேர்ந்த விடுதலை அமைப்புதான் பலூச்விடுதலைராணுவம். சுருக்கமாக பி.எல்.ஏ என்று சொல்வார்கள்.

பலூசிஸ்தானின் சில பகுதிகளை இந்த ராணுவம் ஏற்கனவே தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இந்த பகுதிகளில் பாகிஸ்தான் அரசுக்கு அதிகாரமே கிடையாது. இந்த பகுதிகளில் பலூச் அமைப்பேஉள்கட்டமைப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளை செய்கிறது. பாகிஸ்தானில் சீனர்களை குறி வைத்து தாக்குவதும் இந்த அமைப்பை சேர்ந்தவர்கள்தான். இந்த மாகாணத்தில் அலுமினியம் , தாமிரம் போன்ற கனிமவளங்கள் குவிந்து கிடக்கிறது. இவற்றை, பாகிஸ்தான அரசு சீனர்களுக்கு தாரை வார்ப்பதாக பலூச் அமைப்பினர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

கடந்த 2024 ஆம் அண்டு குயிட்டாரயில்நிலையத்தில் இந்த அமைப்பை சேர்ந்தவர்கள் வெடிகுண்டு வைத்து பல மக்களை கொன்றனர். கராச்சியில் சீன தூதரகத்தையும் தாக்கியுள்ளனர். அதோடு, கடந்த ஆண்டு ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலை கடத்திச் சென்று பலரை கொன்று குவித்தனர்.

### பலூச்சுகள் யார்?

கடந்த 1947 ஆம் ஆண்டு இந்திய பிரிவினையின் போது, பலூசிஸ்தானில் கரன், மகரன், லாஸ்பேலா , கலாட் ஆகிய 4 சுதேசி அரசுகள் இருந்தன. இந்த அரசுகளில் மூன்று பாகிஸ்தானுடன் இணைந்ததை ஏற்றுக் கொண்டன. ஆனால், கலாட் அரசு, பாகிஸ்தானுடன் இணைய மறுத்துவிட்டது. இந்த தருணத்தில் முகமது அலி ஜின்னா கலாட் அரசை பாகிஸ்தானுடன் இணைக்ககட்டாயப்படுத்தி ஆவணங்களில்கையொப்பமிட வைத்தார்.



கடந்த 1958 ம் ஆண்டில், கலாட் மன்னர் நவாப் நௌரோஸ் கான் பலூசிஸ்தான் பாகிஸ்தானிடத்தில் இருந்து சுதந்திரம் பெற்று விட்டதாக அறிவித்தார். பாகிஸ்தானுக்கு எதிராக கொரில்லாப் போரை நடத்தினார்.

ஒரு வருடம் கழித்து, மன்னர் சரணடைந்தால் பொது மன்னிப்பு வழங்குவதாக பாகிஸ்தான் அரசு உறுதியளித்தது.

ஆனால், சரணடைந்த போது, மன்னர் மற்றும் அவரின் மகன்கள் உள்ளிட்ட 150 பேர் கைது செய்யப்பட்டனர்.

குடும்ப உறுப்பினர்கள் பலர் தூக்கிலிடப்பட்டனர். பின்னர், சிறையில் அடைக்கப்பட்ட மன்னர் 1964 ம் ஆண்டு உயிரிழந்தார்.

வங்கதேசத்தை பாகிஸ்தானில் இருந்து பிரித்தது போல, பலூசிஸ்தானை பிரித்து கொடுக்க வேண்டுமென்பதுதான் பலூச் விடுதலை அமைப்பின் நோக்கமாகும்.

இதனால், பாகிஸ்தான் ராணுவத்தினர், போலீசார் மீது கடும் தாக்குதலை பலூச் அமைப்பினர் நடத்துவது உண்டு.

பெண்களும் இந்த அமைப்பில் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இந்தியாவுக்கு ஆதரவாகவும் பலூச் அமைப்பினர் செயல்படுகின்றனர்.

இதற்கிடையே, கடந்த ஞாயிற்றுக்கிழமை பலூசிஸ்தானில் சகாய் மாவட்டத்தில் கொலுண்டி என்ற இடத்தில் , நடந்த தாக்குதலில் 6 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலுக்கு , பொறுப்பேற்றுள்ள பலூச் ராணுவம், இது தற்கொலைப்படைத் தாக்குதல் என்று அறிவித்துள்ளது. அதோடு, தாக்குதலில் ஈடுபட்டவரின் பெயர் ஷரீனா பலூச் என்று அறிவித்து, புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளது. பலூச் படையினர் பெண்களை தொடர்ச்சியாக தற்கொலைப்படை தாக்குதலுக்குபயன்படுத்துவதால், பாகிஸ்தான் அரசு அதிச்சியில் உறைந்துள்ளது.

கடந்தநவம்பர் 27,28,29ம் தேதிகளில் மட்டும் பலூச் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் மொத்தம் 27 பாகிஸ்தான் ராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 2022ம் ஆண்டு கராச்சிபல்கலையில், ஷாரி பலூச் என்ற பெண் ஒருவர் நடத்திய தாக்குதலில் 3 சீனர்கள்கொல்லப்பட்டனர்.

2024ம் ஆண்டு கராச்சி விமான நிலையத்தில் சுமையா பலூச் என்பவர் நடத்திய தாக்குதலில் இரு சீன இன்ஜீனியர்கள் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் ஏலத்திற்கு வந்த விஜபி கார்




ஹரியானாவில்வாகனப் பதிவு எண் ‘HR88B8888’ ரூ.1.17கோடிஎன்றசாதனை விலையில் ஏலம் போனது பலரின்கவனத்தைஈர்த்தது. ஆரம்ப விலை ரூ.50,000 மட்டுமே இருந்தபோதும், 45 விண்ணப்பதாரர்களின் போட்டி காரணமாக விலை வேகமாக உயர்ந்தது. நண்பகலில் ஏலம் ரூ.88 லட்சத்தைக் கடந்தது. இறுதியில், ‘HR88B8888’ என்ற இந்த விஜபி நம்பர் பிளேட் ரூ.1.17 கோடி என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க விலையில் ஏலத்தில் முடிவடைந்தது.

இந்த மிக உயர்ந்த ஏலத்தை சுதிர் குமார் வென்றார். அவர் ரோமுலஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் ஆவார். ஆனால், ஏலப்போட்டியில் வெற்றி பெற்ற போதிலும், அவர் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தொகையை செலுத்தத் தவறினார். இதனால் அவரது பாதுகாப்புத் தொகையான ரூ.11,000 தானாக பறிமுதல் செய்யப்பட்டது.

இந்தப் பின்விளைவுகளுக்குப் பின்னர், ஹரியானா அரசு சுதிர் குமார் மீது நிதி விசாரணை மேற்கொண்டுள்ளது. அவரது கட்டண திறன் மற்றும் நிகரச் சொத்து விவரங்களை சரிபார்க்க, அரசு வருமான வரித்துறையின் உதவியை கோரியுள்ளது. ஏலமுறையின் நம்பகத் தன்மையை காப்பாற்ற இது அவசியம் என போக்குவரத்து அமைச்சர் அனில் விஜ் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது, “பலர் ‘8888’ என்ற எண்ணுக்காக ஏலம் எடுத்தனர். ஆனால், ஏலத்தில் வென்று மிகப்பெரிய தொகை அறிவித்தவர், தொகையைச் செலுத்தாமல் தனது பாதுகாப்புத் தொகையை பறிமுதல் செய்ய அனுமதித்துள்ளார். இது ஏல முறையை சீர்குலைக்கும் செயல்,” என்றார். ஏலதாரர்கள் தங்கள் நிதி திறனை மீறி விலையை உயர்த்துவதைத் தவிர்க்க இந்த விசாரணை உதவும் என்றும் கூறினார்.

கட்டணம் செலுத்தப்படாததால், ‘HR88B8888’ என்ற மதிப்புமிக்க பதிவு எண் இப்போது மறு ஏலத்திற்குத் திரும்புகிறது. புதிய ஏலத் தேதி விரைவில் அறிவிக்கப்படும். கடந்த நவம்பர் 26 அன்று முதன்முதலாக இந்த எண் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தது. இந்தியாவில் இதுவரை விற்கப்பட்ட மிக உயர்ந்த வாகன பதிவு எண் என்பதால் இது பெரும் கவனம் பெற்றது.

## காதலன் ஆணவக்கொலை
## காதலி செய்த சம்பவம்



மகாராஷ்டிர மாநிலம் நன்டெட்பகுதியைச்சேர்ந்தவர் ஆஞ்சல். இவர் ஷாக்சம் என்ற பட்டிலினத்தைச் சேர்ச்த இளைஞரை காதலித்து வந்துள்ளார். ஆஞ்சலின் காதலுக்கு பெற்றோர் மற்றும் சகோதரர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளனர். ஆனால், ஆஞ்சல் தனது காதலில் உறுதியாக இருந்துள்ளார். இதையடுத்து, கடந்த வியாழக்கிழமை சாக்சமை கடத்திச் சென்ற அவர்கள், அவரை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர். பின்னர், தலையில் துப்பாக்கியால் சுட்டு, கொலை செய்துள்ளனர். அப்படியும், வெறி அடங்காமல் தலையில் கல்லை போட்டு முகத்தையே நசுக்கி சிதைத்து விட்டனர்.

காதலன் கொல்லப்பட்டதை அறிந்த ஆஞ்சல் கதறி அழுதார். பின்னர், தனது வீட்டை விட்டு வெளியேறிய அவர், காதலர் சாக்சம் வீட்டுக்கு வந்தார் . இறுதிச்சடங்குகள் நடந்து கொண்டிருந்த போது, தனது காதலரின் சடலத்துக்கு நெற்றியில் பொட்டு வைத்து, மாலை அணிவித்து கணவராக ஏற்றுக்கொண்டார். ஆஞ்சலின் செயல் அங்கிருந்தவர்களை அதிர்ச்சியடைய வைத்து விட்டது. ஆனாலும், யாரும் தடுக்கவில்லை. பின்னர், ஆஞ்சல் கூறுகையில், ‘எனது காதலரை நான் இழந்து விட்டேன். ஆனாலும், எனது காதல் வென்று விட்டது. எனது பெற்றோரும், சகோதரர்களும் எனது காதல் முன்பு தோற்று விட்டனர். இனிமேல், சாக்சமின் வீட்டில் மருமகளாக வாழப் போகிறேன் ‘என்று உறுதிபட தெரிவித்துள்ளார்.

மேலும், ‘சாக்சம் கொல்லப் பட்ட தினத்தன்று காலையில் எனது சகோதரர் என்னை போலீஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றார். அங்கே , சாக்சம் மீது பொய்யான புகார் கொடுக்க என்னை வற்புறுத்தினார். ஆனால், நான் புகார்கொடுக்கமறுத்துவிட்டேன். அப்போது, அங்கேயிருந்த போலீஸ்காரர்கள், ‘இப்படி போலி புகாரை கொடுப்பதை விட சாக்சனை கொன்று விட வேண்டியதுதானே..’ என்று எனது சகோதரரிடத்தில் கூறினர். இதை, சவலாக எடுத்துக் கொண்ட எனது சகோதரர் அன்றைய தினம் மாலை சாக்சமை கொன்று விட்டார். எனது காதலர் பிற மதத்தை சேர்ந்தவர். என்னை திருமணம் செய்ய வேண்டுமென்றால், ஹிந்து மதத்துக்கு மாற வேண்டுமென்று எனது பெற்றோர் கூறியிருந்தனர். அதற்கும், சாக்சம் ஒப்புக் கொண்டுவிட்டார். ஆனால், எனதுகுடும்பத்தினர் அவரை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேயே இருந்துள் ளனர். எனது காதலர் கொல்லப்பட்ட தினத்தன்று காலையில் அவரிடத்தில் பேசினேன். ஆனால், அடுத்த நாள் காலை சாக்சம் கொலை செய்யப்பட்டு விட்டதாக செய்திதாள்களில் செய்தி இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தேன். எனது காதலரை கொலை செய்த எனது தந்தை, சகோதரர்கள் இருவருக்கும் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பாக கொலை செய்யப்பட்ட சாக்சமின் தாயிடத்தில் இருந்து போலீசார் புகார் பெற்றுள்ளனர். சாக்சமை கொலை செய்ததாக காஞ்சன் மாலிவார், ஆஞ்சலின் சகோதரர்கள் ஷகீர், ஹிமேஸ் உள்ளிட்ட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட சாக்சம் கிரிமினல் பின்னணி கொண்டவர் . சமீபத்தில் சிறையில் இருந்து வெளி வந்தவர் என்றும் போலீசார் கூறுகின்றனர்.

## அனைத்து கடன்களையும் அடைத்து விட்டேன் - மல்லையா



தேசிய வங்கிகளிடம் இருந்துபல ஆயிரம் கோடியை கடனாக பெற்றிருந்த கிங்ஃபிஷர் நிறுவனத்தின் உரிமையாளர் விஜய் மல்லையா , பிரிட்டனுக்குத் தப்பி ஓடி விட்டார். தற்போது, அங்கேயே வாழ்ந்து வருகிறார். அதே போல, வைர நிறுவன அதிபரான நீரவ் மோடியும் 13,000 கோடிக்கு மேல் தேசிய வங்கிகளிடம் இருந்து கடன் பெற்று விட்டு, பிரிட்டனுக்குத் தப்பிவிட்டார். தப்பிஓடியவர்கள் லண்டனில் ராஜ வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவம் நடந்துள்ளது.

இவர்களைப் போலவே, ஐ.பி.எல் முன்னாள் தலைவர் லலித் மோடியும் பண மோசடி வழக்கு காரணமாக இந்தியாவில்இருந்துதப்பியவர். இவரும், லண்டனில்தான் வசிக்கிறார். இந்த நிலையில், லண்டனில் லலித் மோடி ஒரு ஆடம்பரமான விருந்துடன் தனது 63வது பிறந்தநாளைக் கொண்டாடினார். இந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தில் விஜய் மல்லையா கலந்து கொண்டார். இது தொடர்பான, பார்ட்டி வீடியோக்களை லலித் மோடிதனதுசமூகஊடகங்களில் வெளியிட்டுள்ளார். லலித் மோடி பிறந்தநாளைக் கொண்டாடிய ஹோட்டல் மிகவும் ஆடம்பரமானது. இந்த ஹோட்டலில் ஒரு மேஜைக்கான குறைந்தபட்ச செலவு ரூ. 1.18 லட்சம் ஆகும். இந்தக் கொண்டாட்டத்தில், லலித் மோடியுடன் விஜய் மல்லையா இருக்கும் வீடியோ இணையத்தில் வைரலாகியது.

இதற்கிடையே, விஜய் மல்லையா யூடியூபர் ராஜ் ஷமானிக்கு அளித்தபேட்டியில், “இந்திய வங்கிகளிடம் இருந்து நான் வாங்கிய அனைத்து லோன்களையும் அடைத்து விட்டேன். நான் வாங்கியது 6,200 கோடிதான். ஆனால், வங்கிகள் என்னிடத்தில் இருந்து 14,000 கோடியை வசூலித்து விட்டன . நான் திருப்பிச் செலுத்த வேண்டியதைவிட பல மடங்கு கூடுதலாக செலுத்திவிட்டேன்‘ என்று குற்றம் சாட்டியிருந்தார்.

விஜய் மல்லையாவின் இந்த பேட்டியை பலரும் இணையத்தில் பரப்பி வந்தனர். இதையடுத்து, விஜய் மல்லையா கடனை அடைத்துவிட்டதாகக் கூறியிருப்பது குறித்து நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தில் நேற்று விவாதம் எழுந்தது.

நாடாளுமன்றத்தில் முராரி லால் மீனா எம்.பி பேசுகையில், ‘கடந்த அக்டோபர் மாதம் வரை, இந்திய பொருளாதார குற்றவியல் நீதிமன்றம் 15 பேரை, பொருளாதாரக் குற்றவாளிகள் என்று தெரிவித்துள்ளது. அவர்களில் 9 பேர் அதிகளவில் வங்கிகளுக்கு கடன் பாக்கி வைத்திருப்பதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இதற்கு நிதியமைச்சம் விளக்கமளிக்க வேண்டும்’ என்று கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த துணை நிதியமைச்சர் பங்கஜ் சவுத்ரி கூறியதாவது, ‘’இந்திய வங்கிகளிடம் ரூ.58,082 கோடியை பல தொழிலதிபர்கள் மோசடி செய்துள்ளனர். கடந்த அக்டோபர் மாதம் வரை ரூ.10,462.79 வசூலிக்கப்பட்டுள்ளது. பல தொழிலதிபர்களுக்கு ரூ. 3,542 கோடி வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

விஜய் மல்லையா ரூ.10,462.79 கோடி கடனாகப் பெற்றார். அவரின் கிங்பிஷர் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்காக கடன் வாங்கினார். வாராக்கடன்கள் மீதான வட்டி மொத்தம் ரூ.16,632.62 கோடி. மத்திய அரசின் கணக்கின்படி, செலுத்த வேண்டிய வட்டி உட்பட, மல்லையா ரூ.15,094.93 கோடியைத் திருப்பிச் செலுத்தியுள்ளார், இன்னும் பல வங்கிகளுக்கு ரூ.12,000 கோடி பாக்கி வைத்துள்ளார்.” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

விஜய் மல்லையா வங்கியில் வாங்கிய கடனை நிறுவனங்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தாமல், வெளிநாடுகளில் சொத்துக்களை வாங்கிய குவித்ததாகவும் வெளிநாடுகளுக்கு பணத்தை மடைமாற்றம் செய்ததாகவும் குற்றச்சாட்டு உள்ளது. இதற்கிடையே, விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது, அதுவும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

# ஜி.கே.என்.எம். மருத்துவமனையில் 'பிசியோகான் 2025' ஒருநாள் உடலியக்க சிகிச்சை மாநாடு

தி கோவை ஹெரால்டு




உடலியக்க சிகிச்சை (Physiotherapy) துறையின் பங்களிப்பு மற்றும் நவீன முன்னேற்றங்களை வலியுறுத்தும் வகையில், கோவையில் உள்ள ஜி.கே.என்.எம் மருத்துவமனை வளாகத்தில் ஒருநாள் உடலியக்க சிகிச்சை மாநாடு நடைபெற்றது.

மருத்துவமனை அரங்கில் நடந்த இந்த மாநாட்டில், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டை ஜி.கே. என்.எம் மருத்துவமனை தலைமைசெயல்அதிகாரிடாக்டர் ரகுபதி வேலுசாமி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மருத்துவமனை நிர்வாகிகள், பேராசிரியர்கள், அனுபவமிக்க உடலியக்கசிகிச்சைநிபுணர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

"இதய மற்றும் நுரையீரல் மறுவாழ்வு சிகிச்சையில் உருவாகி வரும் புதிய போக்குகள்" என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த மாநாடு, உடலியக்க சிகிச்சை துறையில் சமீபத்திய நவீனமுறைகள்மற்றும்தொழில்நுட்பங்களைக்குறித்துவிரிவாக எடுத்துரைத்தது. 'பிசியோகான் 2025' என பெயரிடப்பட்ட இந்த மாநாடு, இந்தியாவில் உடலியக்க சிகிச்சை கல்வி மற்றும் நடைமுறையில் ஒரு முக்கிய கட்டமாக அமைந்தது.

## மகாகவி பாரதியார் பொன்மொழிகள்



- பிறரை ஏமாற்றாமல் இருந்தாலே போதும். தெய்வ அருளுக்குப் பாத்திரமாகி விடுவோம்.
- இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை.
- எவனையும் வெற்றுக் காகிதம் என ஒருபோதும் எண்ணாதே. ஒருநாள் அவன் பட்டமாய்ப் பறப்பான். நீயும் அவனை அண்ணாந்துதான் பார்க்க வேண்டும்
- அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால், அப்போது சாவும் அங்கே அழிந்து போகும்.

LAKSHAKA TEX LIMITED

# ஷாருக்கான்-கஜோலுக்கு லண்டன் லெஸ்டர் சதுக்கத்தில் சிலை



இந்தி திரைப்பட உலகின் கலாச்சார சின்னமாக விளங்கும் 'தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே' படத்தில் நடித்த ஷாருக்கான் கஜோல் ஜோடியின் கதாபாத்திரங்களை கொண்டு உருவாக்கப்பட்ட வெண்கலச் சிலை லண்டனின் புகழ்பெற்ற லெஸ்டர் சதுக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்திய திரைப்படத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இங்கு முதல் முறையாக இப்படிப்பட்ட உலோகச் சிலை அமைக்கப்பட்டுள்ளது என்பதில் ரசிகர்கள் பெருமிதம் அடைந்துள்ளனர்.

பிரபலமான சுற்றுலா தளமான லெஸ்டர் சதுக்கத்தில் 'Scenes in the Square' என்ற பெயரில் உலகின் புகழ்பெற்ற திரைப்பட, கார்ட்டூன் கதாபாத்திரங்களின் சிலைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஹாரிபாட்டர், மிஸ்டர் பீன், பேட்மேன், வொண்டர்வுமன் உள்ளிட்ட பலரின் சிலைகளுக்கு அடுத்ததாக தற்போது ராஜ்சிம்ரன் சிலையும் இடம் பெற்றுள்ளது.

1995 ஆம் ஆண்டு வெளியாகி சூப்பர் ஹிட்டாகிய தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே, 4 கோடி ரூபாயில் தயாராகி 102 கோடிக்கு மேல் வசூல் செய்தது. மேலும், இந்த படம் மும்பையில் உள்ள மராத்தா மந்திர் தியேட்டரில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக திரையிடப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டிடத்தின் வெளிப்புற கிழக்கு பக்க மாடியில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சிலை, படத்தின் புகழ்பெற்ற போஸை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த விழாவில் ஷாருக்கான் மற்றும் கஜோல் இருவரும் நேரில் கலந்து கொண்டனர்.

திரைப்பட ரசிகர்களுக்கு இதனால் ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சி கிடைத்துள்ளது. முக்கியமாக, படத்தில் ராஜ், சிம்ரன் இருவரும் லெஸ்டர் சதுக்கத்திலேயே முதன் முதலாக அறியாமல் சந்திக்கும் காட்சி இடம்பெறுவதாகவும், அந்த நினைவைக் கொண்டாடும் வகையில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகின் பொழுதுபோக்கு துறையின் மையமாக கருதப்படும் லெஸ்டர் சதுக்கத்தில் இந்திய திரைப்படத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தச் சிலை, ஹாலிவுட் கதாபாத்திரங்களுடன் இணைந்து நிற்பதால், சர்வதேச அளவில் இந்திய சினிமா உருவாக்கும் தாக்கத்தையும் ஈர்ப்பையும் வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிடப்படுகிறது.




# ஜோய் ஆலுக்காஸில் "பிரில்லியன்ஸ் டையமண்ட் ஜுவல்லரி ஷோ"

தி கோவை ஹெரால்டு



உலகின் ஃபேவரிட் ஜுவல்லர் ஜோய் ஆலுக்காஸ், தமிழ்நாட்டை பிரகாசிக்கச் செய்யும் 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவெல்லரிஷோ'வை, தனது கோவை கிராஸ்கட்ரோடு ஷோரூமில் நடைபெறும் இந்த கண்காட்சி, வைர நகைகளின் தலைசிறந்த கலைநயம், அழகியல் மற்றும் புதுமையை ஒருங்கிணைக்கிறது.

இந்த நிகழ்ச்சியை, கே.ஜி.மருத்துவமனையின் தலைவர் டாக்டர் ஜி.பக்தவத்சலம் தொடங்கி வைத்தார். பார்க் குழும கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் அனுஷா ரவி, ஜோயாலுக்காஸ் ரீடெயில் தலைவர் ராஜேஷ் கிருஷ்ணன், பிராந்திய மேலாளர் சுமேஷ் கே.ஏ. உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஜோய் ஆலுக்காஸ் குழுமத்தின் சேர்மன் டாக்டர் ஜோய் ஆலுக்காஸ் இந்த ஷோவை பற்றி தெரிவித்தார்.

இந்த கண்காட்சியில் ரூ.1 லட்சத்துக்கு மேற்பட்ட மதிப்பில் வைர நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலவச தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

'பிரில்லியன்ஸ் டையமண்ட் ஜுவெல்லரி ஷோ', டிசம்பர் 21 வரை கிராஸ் கட் ரோடு ஜோயலுக்காஸ் ஷோரூமில் மட்டுமே நடைபெறுகிறது.

### காமராஜர் குறித்து அவதூறு பேச்சு

# நாடார் மகாஜன சங்கத்தினர் காவல் ஆணையரிடம் மனு

தி கோவை ஹெரால்டு



பெருந்தலைவர் காமராஜர் குறித்து அவதூறாக பேசியதாக குற்றம்சாட்டி, சம்பந்தப்பட்ட யூடியூபர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கோவை மாநகர் மாவட்ட நாடார் மகாஜன சங்கத்தினர் காவல் துணை ஆணையரிடம் மனு அளித்தனர்.

கோவைமாநகர் மாவட்ட நாடார் மகாஜன சங்க தலைவர் ராஜா என்ற கருணாமூர்த்தி, மாவட்ட செயலாளர் டி.சி.விஜயகுமார் ஆகியோர் தலைமையில் சங்க நிர்வாகிகள், கோவைமாநகர காவல் ஆணையர் அலுவலகத்திற்கு வந்தனர்.

அவர்கள் துணை காவல் ஆணையர் திவ்யாவிடம் அளித்த மனுவில், ஒரு யூடியூபர் பெருந்தலைவர் காமராஜரின் புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பேசியுள்ளதாகவும், அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருவதாகவும் தெரிவித்தனர்.

இதன் காரணமாக பொதுமக்களிடையே தவறான கருத்துகள் உருவாகும் அபாயம் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர்கள், சம்பந்தப்பட்ட யூடியூபர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அந்த யூடியூப் சேனலைத் தடை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இந்த நிகழ்வின்போது சங்கத்தின் வக்கீல் அணி தலைவர் சுந்தரபாலன், பொதுச்செயலாளர் எம். சரவணன், லட்சுமி ஸ்டீல் கார்த்தீசன், சாந்தகுமார், தெற்கு மாவட்ட தலைவர் ஏ.வேலாயுதம் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பாலாஜி, தங்கபெருமாள், அந்தோணிசெல்வவினோத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உலகளாவிய வணிகத் திறன் கொண்ட 200 நிறுவனங்களில் கல்ச்சர்லிட்டிக்ஸ் தேர்வு

பணியிடகலாச்சாரத்தை அளவிடவும், நிர்வகிக்கவும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய மாற்றங்களை உருவாக்கி வரும் முன்னோடி கலாச்சார தொழில்நுட்ப நிறுவமான கல்ச்சர்லிட்டிக்ஸ், 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய வணிக திறன் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட 200 நிறுவனங்கள் பட்டியலில் ஃபோர்ப்ஸ் இந்தியா & டிக்ளொபலிஸ்ட் ஆகிய நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த முக்கியமான சாதனை குறித்து, கல்ச்சர் லிட்டிக்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் யெஷஸ்வினி ராமஸ்வாமி மற்றும் இணை நிறுவனர் ஸ்மிதா தாரூர் ஆகியோர் மகிழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.



# ஜெயலலிதா நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை



▸ முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா 9வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, திண்டுக்கல் சீனிவாசன், பொள்ளாச்சி ஜெயராமன், செல்லூர் ராஜு, கே.பி.முனுசாமி, பி.வளர்மதி, சட்டமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள்.

## கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கலுக்காக

# ஊட்டி சிறப்பு மலை ரயில் இயக்கம்



கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு, ஊட்டி மேட்டுப்பாளையம், குன்னூர் ஊட்டி மற்றும் ஊட்டி கேத்தி ஊட்டி வழித்தடங்களில் சிறப்பு மலை ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த சிறப்பு சேவைகள் வருகிற 25-ஆம் தேதி முதல் ஜனவரி 26-ஆம் தேதி வரை நடைபெறும் என சேலம் ரயில்வே கோட்டம் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

அதன்படி, மேட்டுப்பாளையத்தில் இருந்து டிசம்பர் 25, 27, 29, 31 மற்றும் ஜனவரி 2, 4, 15, 17, 23, 25 ஆகிய தேதிகளில் காலை 9.10 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மதியம் 2.25 மணிக்கு ஊட்டி சென்றடையும். மறுமார்க்கத்தில், டிசம்பர் 26, 28, 30 மற்றும் ஜனவரி 1, 3, 5, 16, 18, 24, 26 ஆகிய தேதிகளில் ஊட்டியில் இருந்து காலை 11.25 மணிக்கு புறப்படும் ரெயில் மாலை 4.20 மணிக்கு மேட்டுப்பாளையம் வரும்.

இதே நாட்களில் ஊட்டி குன்னூர் இடையிலும் சிறப்பு மலை ரயில்கள் இயக்கப்படுகின்றன. ஊட்டியில் இருந்து மதியம் 2.50 மணி மற்றும் மாலை 3.55 மணிக்கு புறப்படும் ரயில்கள் குன்னூர் செல்லும். மறுமார்க்கத்தில், குன்னூரில் இருந்து காலை 9.20 மணிக்கு புறப்படும் ரயில் காலை 10.45 மணிக்கு ஊட்டி சென்றடையும்.

மேலும், டிசம்பர் 25 முதல் 31 வரை மற்றும் ஜனவரி 1, 2, 3, 4, 16, 17, 18, 24, 25, 26 ஆகிய தேதிகளில் குன்னூர் ஊட்டி வழித்தடத்திலும் சிறப்பு ரயில் இயக்கப்படும். குன்னூரில் இருந்து காலை 8.20 மணிக்கு புறப்படும் இந்த ரயில், 9.40 மணிக்கு ஊட்டி செல்லும். அதேபோல், ஊட்டியில் இருந்து மாலை 4.45 மணிக்கு புறப்பட்டு 5.55 மணிக்கு குன்னூர் சென்றடையும்.

சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், ஊட்டி கேத்தி ஊட்டி இடையே மூன்று சுற்றுகள் கொண்ட 'ஜாய் ரைடு' சிறப்பு மலை ரயில்களும் இயக்கப்படுகின்றன. முதல் சுற்று காலை 9.45 மணிக்கு ஊட்டியில் இருந்து புறப்பட்டு 10.10 மணிக்கு கேத்தி சென்றடைந்து, 10.30 மணிக்கு புறப்பட்டு 11 மணிக்கு ஊட்டி திரும்பும். இரண்டாவது சுற்று காலை 11.30 மணிக்கு புறப்பட்டு மதியம் 1.10 மணிக்கும், மூன்றாவது சுற்று மாலை 3 மணி முதல் 4.30 மணி வரையும் நடைபெறும்.

# த.வெ.க பக்கம் சாய்கிறாரா ஓ.பி.எஸ்?

தி கோவை ஹெரால்டு

அப்படியும் இல்லாமல் இப்படியும் இல்லாமல் திரிசங்கு சொர்க்கம் போல் அல்லாடிக் கொண்டிருக்கும் ஓ.பன்னீர்செல்வத்தின் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா. இதனால் தனிக்கட்சி தொடங்கும் முடிவைகைவிட்டிருக்கிறார் பன்னீர்செல்வம்.

பழனிசாமிக்கும் பாஜகவுக்கும் இடையே மாட்டிக்கொண்டு, ஒரு கட்டத்தில் இரு தரப்புமே கைவிட்ட நிலையில் நடுவில் நின்று திண்டாடிக் கொண்டிருந்தார் பன்னீர்செல்வம்.

அமமுக என்று தனிக்கட்சி கைவசம் இருப்பதால் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையலாம் அல்லது தவெகவில் இணையலாம் என்ற வாய்ப்புகள் டிடிவி தினகரனுக்கு இருக்கின்றன. அப்படி ஒரு வாய்ப்புதனக்கில்லாததால் தனிக்கட்சி தொடங்கியாவது தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையும் முடிவை எடுத்தார் பன்னீர்செல்வம்.

இதற்காக கடந்த செப்டம்பர் மாதம் 4-ம் தேதி அன்று மதுரையில் மாநாடு நடத்துவது என்று முடிவெடுத்தார். இதற்கிடையில் செங்கோட்டையன் முன்வந்து அதிமுகவில் ஒருங்கிணைப்பை முன்னெடுத்துச் சென்றதால் மாநாடு முடிவை கைவிட்டார் பன்னீர்செல்வம். செங்கோட்டையனின் முயற்சிகள் எல்லாம் தோல்வியில் முடிந்து அவரும் தவெக பக்கம் சென்றுவிட்டதால் திரிசங்கு சொர்க்கத்திலேயே அல்லாடிக் கொண்டிருந்தார் பன்னீர்செல்வம்.



இந்த நிலையில் செங்கோட்டையன் மூலமாக தவெகவில் இணைய பன்னீர் செல்வத்திற்கு அழுத்தம் தரப்பட்டு வந்தது. இதை அறிந்த அமித்ஷா, பன்னீர்செல்வமும் தவெக சென்றுவிட்டால் அதிமுக ரொம்பவே பலவீனமாகிவிடும். அது தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பாதகமாக போய்விடும் என்பதை உணர்ந்து பன்னீர் செல்வத்தை டெல்லியில் அனுப்பிபேசி இருக்கிறார்.

தவெக பக்கம் வரச் சொல்லிசெங்கோட்டையன் அழுத்தம் கொடுப்பதாக வந்த செய்திகளையும் அவர் மறுக்கிறார். ''செங்கோட்டையன் தவெகவில் சேர்ந்த பிறகு நான் அவரிடம் பேசவில்லை. அவரும் என்னிடம் பேசவில்லை'' என்கிறார்.

"தமிழகத்தில் இன்றைக்குஇருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலைகளை எடுத்துச்சொன்னேன். அமித்ஷா கேட்டுக் கொண்டார்'' என்று பன்னீர்செல்வம் சொல்வதன் மூலமே அதிமுகவில் அமித்ஷா மூலம் ஒருங்கிணைப்பு சாத்தியமாகிறது என்பது தெரிகிறது. பன்னீர் செல்வத்தின் பேச்சிலும் அந்த நம்பிக்கை தெரிகிறது.

## 45 வயது மேற்பட்ட பெண் ரயில் பயணிகளுக்கு 'லோயர் பெர்த்'

இந்தியாவில் நீண்ட தூர பயணங்களுக்கு அதிகளவில் மக்கள் ரயில் போக்குவரத்தையே தேர்ந்தெடுக்கின்றனர். குறிப்பாக மூத்த குடிமக்கள் மற்றும் வயதானவர்கள் ரயில் பயணத்தை பாதுகாப்பானதாகவும் வசதியானதாகவும் கருதுகின்றனர். எனினும், சில சந்தர்ப்பங்களில் வயதான பெண்கள் மற்றும் முதியவர்கள் மேல் படுக்கை பயணம் செய்யும் நிலைக்கு தள்ளப்படுவது அசௌகரியத்தை ஏற்படுத்துவதாக நீண்ட காலமாக குற்றச்சாட்டுகள் எழுந்து வந்தன.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், ரயில்வே நிர்வாகம் முன்பதிவு விதிகளில் முன்னுரிமை வசதிகளை வழங்கி வருகிறது. அதன்படி, மூத்த குடிமக்கள், 45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் ரயில் டிக்கெட் முன்பதிவு செய்யும் போது, அவர்கள் தனிப்பட்ட முறையில் எந்த விருப்பத்தையும் தேர்வு செய்யாவிட்டாலும், தானாகவே கீழ்படுக்கை (Lower Berth) இருக்கை ஒதுக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த ஏற்பாடு முதியோர் மற்றும் பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் எளிதான பயணத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், ராஜ்தானி, சதாப்தி உள்ளிட்ட அனைத்து மெயில் மற்றும் எக்ஸ்பிரஸ் ரயில்களிலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களுடன் பயணம் மேற்கொள்ளும் நபர்களுக்கான சிறப்பு முன்பதிவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏதேனும் காரணங்களால் வேறு வகை படுக்கைகளில் பயணம் செய்யும் மூத்த குடிமக்கள், கர்ப்பிணி பெண்கள் உள்ளிட்டோருக்கு, கீழ்படுக்கை காலியாக இருந்தால், பயணத்தின் போது அதனை மாற்றி வழங்கும் வசதியும் மேற்கொள்ளப்படும் என ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. இது, பயணிகளின் பாதுகாப்பும், சௌகரியமான பயணமும் உறுதி செய்யும் முயற்சியாக கருதப்படுகிறது.

## அழகாக இருந்தால் கொலை செய்யும்

# ஹரியானாவில் கொடூர பெண்



ஹரியானாவில் தன்னை விட யாரும் அழகாகஇருக்கக்கூடாது என்பதற்காக சொந்த மகன் உட்பட 4 குழந்தைகளை கொன்ற பெண்ணை போலீசார் கைது செய்துள்ளனர்.

ஹரியானா மாநிலம் பானிபட் அருகிலுள்ள நவுலதா கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் திருமண விழா நடந்துள்ளது. அப்பொழுது அங்கு விளையாடிக்கொண்டிருந்த விதி என்ற சிறுமி மாயமாகியுள்ளார். தொடர்ந்து, சிறுமி விதியின் உறவினர்கள்திருமணமண்டபத்தில் பல பகுதிகளில் சிறுமியை தேடியும் கிடைக்காததால் திருமண வீட்டில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் சிறுமியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அச்சமடைந்தனர். இதனிடையே மண்டபத்தின் ஒரு பகுதியில் உள்ள தண்ணீர் நிரம்பிய பெரிய வாளியில் சிறுமி விதி நீரில் மூழ்கி உயிரிழந்து கிடந்துள்ளார். இதனை கண்டு சிறுமியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இதனையடுத்து, சிறுமியின் உறவினர்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்த நிலையில், போலீசார் விசாரணை நடத்தியுள்ளனர். விசாரணையில் சிறுமி விதி நீரில் மூழ்கடித்து கொடூரமாக கொலை செய்யப்பட்டது தெரியவந்ததையடுத்து போலீசார் விசாரணையை துரிதப்படுத்தினர். மேலும், சிறுமி திருமண வீட்டில் விளையாடியது, அவர் யார் யாருடன் பேசினார் என வீடியோ பதிவுகளை வைத்து விசாரித்தனர். அப்போது, சிறுமி கடைசியாக ஒரு பெண்ணுடன் மாடிப்படி ஏறி சென்றதும், அப்பெண் பூனம் (வயது 34) என்றும் தெரியவந்தது.

உடனே பூனத்தை போலீசார் மடக்கி பிடித்து தீவிர விசாரணை நடத்தினர். மேலும், பூனத்திடம் நடத்திய விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியானது.

சிறுமி விதி திருமண வீட்டில் அழகாக இருந்ததாகவும், தன்னைவிட யாரும் அழகாக இருக்கக் கூடாது என்ற பொறாமையில் சிறுமி விதியை கொலை செய்ய திட்டம் தீட்டி மாடிக்கு அழைத்து சென்றுள்ளார்.

அப்போது, ஒரு அறைக்குள் சிறுமியை அழைத்து சென்ற பூனம் வாளியில் உள்ள தண்ணீருக்குள் சிறுமியின் தலையை அமுக்கி கொலைசெய்துள்ளார். இதன்பின்னர் எதுவும் நடக்காதது போல் கதவை பூட்டிவிட்டு திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார் என்பது போலீசாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தியதில், 2023-ம் ஆண்டில் தன்னைவிட அழகாக இருந்ததாக அவரது மைத்துனியின் 9 வயது மகள் இஷிகாவை வீட்டில் உள்ள தண்ணீர் தொட்டியில் மூழ்கடித்து கொன்றுள்ளார். அப்பொழுது பூனத்தின் 3 வயது மகன் சுபத் பார்த்து விட்டான் என்பதால், வெளியில் சொல்லிவிடுவான் என பயந்து சுபத்தையும் கொலை செய்துள்ளார். மேலும், கடந்த ஆண்டு தனது தாய் வீட்டில் உறவினரின் 6 வயது மகள் ஜியாவை நீரில் மூழ்கடித்து கொன்றதாகவும் கொலையாளி பூனம் போலீசாரின் விசாரணையில் தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் ஹரியானாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.




Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)